

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (28.3.2025) தலைமைச் செயலகத்தில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் கே. காதர் மொய்தீன், மாநில பொதுச் செயலாளர் முகமது அபுபக்கர், செயலாளர் ஷாஜகான், மாணவரணி செயலாளர் முகமது அஷ்ரத் ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்ஃபு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

### வக்ஃப் வாரிய திருத்த சட்ட முன்வடிவை திரும்பப்பெற வலியுறுத்திய தீர்மானத்தை

# வரவேற்ற கட்சித் தலைவர்கள் - உறுப்பினர்களுக்கு நன்றி!

## சட்டப் பேரவையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 29-**

**சட்டப்பேரவையில் வக்ஃப் வாரிய திருத்த சட்ட திருத்த மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தனித்தீர்மானத்தை அ.தி.மு.க. உள்பட பேரவையில் உள்ள அனைத்துக் கட்சிகளும் (பா.ஜ.க. நீங்கலாக) வரவேற்றன. இத் தீர்மானத்தை வரவேற்ற கட்சித் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்.**

சட்டப் பேரவையில் நேற்று முன் தினம் கேள்வி நேரம் முடிவுற்றதும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வக்பு சட்டத்திருத்த முடிவுகளை முழுமையாக திரும்பப் பெற வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி தனிநபர் தீர்மானம் கொண்டு வந்தார்.

இத்தீர்மானத்தை ஆதரித்து ஜெகன்மூர்த்தி, வேல்முருகன், ஈஸ்வரன், ஜவாஹிருல்லா, சதன் திருமலைக்குமார், டி.இராமச்சந்திரன், நாகை மாலி, சிந்தனைச்செல்வன், ஷாநவாஸ், ஜி.கே.மணி, அசன் மௌலானா, எஸ்.பி. வேலுமணி ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

நிறைவாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

இந்த வக்ஃப் வாரிய திருத்த சட்டமுன்வடிவை திரும்பப்பெற வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து இங்கே அனைத்துக் கட்சிகளின் சார்பாக அந்தந்த கட்சியினுடைய தலைவர்கள், உறுப்பினர்கள், பிஜேபியைத் தவிர, அவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். இங்கே பிரதான எதிர்க்கட்சியும் மனதார வரவேற்று இருக்கிறார்கள். அதற்காக நான் முதலில் எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.விடம் நான் வைக்கக்கூடிய ஒரு கோரிக்கை, நேற்று முன்தினம் இதே அவையிலே இரு மொழிக் கொள்கை பிரச்சினை பற்றி பேசுகிறபோது ஒன்று சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள். எனக்கு செய்தி கிடைத்திருக்கிறது. யாரை சந்திக்க போகிறார் என்கிற அந்த செய்தியும் கிடைத்திருக்கிறது என்று சொன்னேன். ஆக, டெல்லியில் இறங்கிய பிறகு, அவர் செய்தியாளர்களிடம் பேசுகிறபோது நான் இங்கே அவையிலே பேசியதை அங்கே நிருபர்கள் கேட்டிருக்கிறார்கள். நான் யாரையும் சந்திக்க வரவில்லை. எந்த அரசியல் நிலையிலும் வரவில்லை. எங்களுடைய கட்சி அலுவலகத்தை பார்வையிடுவதற்காக வந்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றார். அதற்குப் பிறகு மாலையிலே பார்த்தால் ஒரு காரிலே ஏறி புறப்பட்டு இருக்கிறார்; உள் துறை அமைச்சரை சென்று சந்தித்திருக்கிறார். சந்திக்கலாம், நாங்கள் அதை வேண்டாமென்றோ, தவறு என்றோ சொல்லவில்லை.

ஆனால், அதே நேரத்தில், அங்கே சென்று தமிழ்நாட்டிற்கு வேண்டிய உரிமையை நான் கேட்டிருக்கிறேன், இருமொழிக் கொள்கை பற்றி நான் பேசியிருக்கிறேனென்று தில்லியிலிருந்து செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார். அதற்காக, நான் உள்ளபடியே இந்த அவையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நன்றி தெரிவிக்கும் நேரத்தில், எவ்வாறு இருமொழிக் கொள்கை குறித்து வலியுறுத்தி வந்திருப்பதாகத் தெரிவித்தாரோ, அதேபோல் வக்ஃபு சட்டத் திருத்தப் பிரச்சினையையும் அடுத்த முறை டெல்லி செல்லும்போது அவர் வலியுறுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

### 100 நாள் வேலை உறுதித் திட்ட நிதி கோரி

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் 18 இடங்களில் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, மார்ச் 29-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. ஒன்றிய செயலாளர்களுக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள் வருமாறு:-

ஒன்றிய அரசு 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4,034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் இன்று (29.3.2025-சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலின்படி "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:-



**அரக்கோணம் சட்டமன்ற தொகுதி**

1) அரக்கோணம் கிழக்கு -முள்வாய்,புளியமங்களம்,

2) அரக்கோணம் மத்தியம் தணிகை போளூர், வடமாம்பாக்கம்,

3) அரக்கோணம் மேற்கு சாலை பஸ்நிலையம், குருவராஜப் பேட்டை பஸ்நிலையம்,

4) நெமிலி கிழக்கு - சேந்தமங்கலம், கடம்பநல்லூர்

**சோளிங்கர் சட்டமன்ற தொகுதி**

5) நெமிலி மத்தியம் - கீழ்வீதி, நாகவேடு

6) நெமிலி மேற்கு - திருமால்பூர், மேலபுலம் புதூர்

7) சோளிங்கர் கிழக்கு - கூடலூர், பரவத்தூர்

8) சோளிங்கர் மத்தியம் கொடைக்கல் மோட்டூர், பானாவரம் கூட்ரோடு

9) சோளிங்கர் மேற்கு - வேலம், ஜம்புகுளம் கூட்ரோடு

10) காவேரிப்பாக்கம் தெற்கு - ஓச்சேரி, பெரும்புலிபாக்கம்

11) காவேரிப்பாக்கம் வடக்கு பன்னியூர் கூட்ரோடு, பானாவரம்

**இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதி**

12) வாலாஜா மத்தியம் விசி மோட்டூர் அண்ணா சிலை அருகில், சிப்காட் பஸ்நிலையம் அருகில்,

13) வாலாஜா கிழக்கு - வள்ளுவம்பாக்கம், குடிமல்லூர்

14) ஆற்காடு மேற்கு - பூட்டுத்தாக்கு, உப்புப் பேட்டை

**ஆற்காடு சட்டமன்ற தொகுதி**

15) திமிரி கிழக்கு - மாம்பாக்கம், வாழைப்பந்தல்

16) திமிரி மேற்கு - காவனூர், தாமரைப்பாக்கம்

17) ஆற்காடு கிழக்கு - தாஜ்புரா, கலவை கூட்ரோடு

18) கணியம்பாடி - கணியம்பாடி, மூஞ்சூர்பட்டு

மேற்கண்ட இடங்களில் ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நமது மாவட்டத்தில் உள்ள ஒன்றிய கழக செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்து கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கையில் கூறியுள்ளார்.

### 100 நாள் வேலை உறுதித் திட்டம் : நிதி வழங்க மறுக்கும்

# பா.ஜ.க. அரசைக் கண்டித்து தேனி வடக்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. அறிவிப்பு!

தேனி, மார்ச். 29-

தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் ஆணையின்படி. 100 நாள் வேலை உறுதித்திட்டத்தில் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து தேனி வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் 29.03.2025 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும்.

கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடங்களின் விவரம் ;



**1. பெரியகுளம் தெற்கு**

மாவட்ட கழக செயலாளர். தங்கதமிழ்செல்வன் எம்.பி. ஜெயமங்கலம் ஊராட்சி பஸ் நிறுத்தம் அருகில் பெரியகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ் சரவணகுமார் எம்.எல்.ஏ., தலைமை பொதுக்குழு உறுப்பினர் ராஜரமேஷ் இலட்சுமிபுரம் ஊராட்சி பஸ் நிறுத்தம் அருகில்

**2 பெரியகுளம் வடக்கு**

மாவட்ட அவைத்தலைவர் பி.டி.செல்லப்பாண்டியன் பொம்மிநாயக்கன் பட்டி ஊராட்சி பஸ் நிறுத்தம் அருகில் பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன் சில்வார்பட்டி ஊராட்சி பஸ் நிறுத்தம் அருகில்

**3.தேனி வடக்கு**

மாவட்ட துணை செயலாளர் கே.செந்தில்முருகன் வெங்கடாச்சலபுரம் ஊராட்சி பஸ் நிறுத்தம் அருகில் - தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் எம். சக்கரவர்த்தி குப்பி நாயக்கன்பட்டி ஊராட்சி பஸ் நிறுத்தம் அருகில் -

**4.தேனி தெற்கு**

தேனி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.வி.ரத்தினசபாபதி கோட்டூர் ஊராட்சி பஸ் நிருத்தம் அருகில் மாவட்ட துணை செயலாளர் எம்.திருக்கண்ணன் சீலையம்பட்டி ஊராட்சி பஸ் நிறுத்தம் அருகில்

**5.போடிநாயக்கனூர் மேற்கு**

போடிநாயக்கனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.லட்சுமணன் சில்லமரத்துபட்டி ஊராட்சி பஸ் நிறுத்தம் அருகில் - மாவட்ட துணை செயலாளர் கே.செந்தில்முருகன் நாகலாபுரம் ஊராட்சி பஸ் நிறுத்தம் அருகில்

**6.போடிநாயக்கனூர் கிழக்கு**

போடிநாயக்கனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.பி.அய்யப்பன் உப்புக்கோட்டை ஊராட்சி பஸ் நிறுத்தம் அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.சங்கர் கோடங்கிப்பட்டி ஊராட்சி பஸ் நிறுத்தம் அருகில்

**7.சின்னமனூர் மேற்கு**

சின்னமனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.முருகேசன் சங்கராபுரம் ஊராட்சி பஸ் நிறுத்தம் அருகில் மாவட்ட பொருளாளர் எஸ்.சுரேஷ் புலிகுத்தி ஊராட்சபஸ் நிறுத்தம் அருகில்

இக்கண்டன ஆர்ப்பாட்டங்களுக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் சட்ட மன்ற,நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள்,நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக 100 நாள் வேலைஉறுதித்திட்டத்தின் கீழ் பணிபுரியும் பொதுமக்கள் அனைவரும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தங்க தமிழ்ச்செல்வன். எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து–

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் சங்கராபுரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சங்கராபுரம், மார்ச். 29-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சங்கராபுரம் தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (29.3.2025 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் சங்கராபுரம் பாலமேடு வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் அருகிலும், அதேபோல் அரசம்பட்டு பேருந்து நிறுத்தம் அருகில் காலை 11 மணி அளவிலும் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. தலைமையில் இரண்டு இடங்களில் நடைபெறுகிறது.



மேலும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் 100 நாள் வேலை உறுதி திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ரூ.4,034 கோடியை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய சர்வாதிகார பா.ஜ.க. அரசைக் கண்டித்து நடைபெறுவதால் சங்கராபுரம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,சார்பு அணி நிர்வாகிகள், நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சங்கராபுரம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ந.ஆறுமுகம் நன்றிஉரைநிகழ்த்துகிறார்.

### கடலூர் கிழக்கு மாவட்டக் கழக – பொறியாளர் அணிக்கு

# ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகப் பொறுப்புகளுக்கு நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர், மார்ச் 29-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க பொறியாளர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கு QR CODE மூலம் விண்ணப்பம் செய்தவர்களுக்கு நேர்காணல், இன்று (29.03.2025 - சனிக்கிழமை), பகல் 2.00 மணி அளவில், சிதம்பரம் தெற்கு வீதி அறுபத்து மூவர் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. மாநில பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன், கழக பொறியாளர் அணி துணை செயலாளர், கடலூர் மண்டல பொறுப்பாளர் சி.பிரதிப் ஆகியோர் முன்னிலையில் நேர்காணல் நடைபெற உள்ளது.



ஆகவே மேற்கண்ட பொறுப்பிற்கு QR CODE மூலம் விண்ணப்பம் செய்தவர்கள் மட்டும் உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் QR CODE மூலம் விண்ணப்பம் செய்தவர்கள் மட்டும் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடு செய்து, தாங்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர், மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

### 100 நாள் வேலைத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கழக - அனைத்து ஒன்றியங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் அறிக்கை!

குமரி, மார்ச். 29-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கன்னியா குமரி கிழக்கு மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட அனைத்து ஒன்றியங்களிலும் 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (29.03.2025, சனிக்கிழமை) காலை 10.00 மணிக்குகன்னியாகுமரிகிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றியங்களிலும் அந்தந்த ஒன்றிய செயலாளர்களின் தலைமையில் கீழே குறிப்பிட்ட இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.



ஆகவே, இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகி கள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் தங்களுக்கு உட்பட்ட ஒன்றியங்களில்நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாக பங்கேற்று தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு எதிராக தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம் சார்பில் மைலாடி மற்றும் தேரேகால் புதூர் இடங்களிலும்,

அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம் சார்பில் கொட்டாரம் மற்றும் கோவளம் இடங்களிலும்,

தோவாளை வழக்கு ஒன்றியம் சார்பில் காட்டுப்புதூர் மற்றும் தடிக்காரண் கோணம் இடங்களிலும்,

தோவாளை கிழக்கு ஒன்றியம் சார்பில் செண்பகராமன் புதூர் மற்றும் சகாயநகர் இடங்களிலும்,

இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றியம் சார்பில் இராஜாக்கமங்கலம் சந்திப்பு மற்றும் ஆலங்கோட்டை சந்திப்பு இடங்களிலும்,

இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம் சார்பில் மேல கிருஷ்ணன்புதூர் மற்றும் மணக்குடி இடங்களிலும்,

குருந்தன்கோடு கிழக்கு ஒன்றியம் சார்பில் வெள்ளிச் சந்தை மற்றும் மணவாளக்குறிச்சி இடங்களிலும்,

குருந்தன்கோடு மேற்கு ஒன்றியம் சார்பில் திங்கள் நகர் மற்றும் மொட்டவிளை தபால்நிலையம் அருகிலும்,

தக்கலை தெற்கு ஒன்றியம் சார்பில் கண்டன் விளை மற்றும் காட்டாத்துறை ஆகியோர் இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இவ்வாறு ரெ.மகேஷ் அறிவித்துள்ளார்.